# அப்போஸ்தலனாகிய யூதா எழுதின பொதுவான நிருபம்

விசுவாச துரோகத்ததை சந்தித்தல்

# ஆக்கியோன்

1. இயேசு உயிர்த்தெழுந்தபின் தரிசனமான தெரிந்தெடுக்கப்பட்ட தனிநபர்களில் இவரும் ஒருவர் (பார்க்க 1கொலோ 15:7)

2. பவுல் இவரை சபையின் தூண் என்று அழைத்தார் (கலா 2:9)

3. பவுல் புதிய விசுவாசத்திற்குள் வந்த பின்னர் முதல்முறை எருசலேமுக்குச் சென்றபோது யாக்கோபை சந்தித்தார் (கலா 1:19)

4. பவுல் தனது இறுதி எருசலேம் வருகையிலும் அவரை சந்தித்தார் (அப் 21:18)

5. பேதுரு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதும் அவர் அதை யாக்கோபுக்கு அறியத்தரும்படி தமது நண்பர்களை கேட்டுக்கொண்டார் (அப் 12:17)

6. யாக்கோபு எருசலேமின் சபைக்குழுவின் முக்கிய தலைவராக இருந்தார் (அப் 15:13)

7. யாக்கோபு நன்கு அறியப்பட்டவராக இருந்ததால் யூதா தன்னை அறிமுகப் படுத்தும்போது "யாக்கோபின் சகோதரன்" என்று அறிமுகப்படுத்துகிறார் (யூதா 1:1).

8. இவர் கிபி 62ல் இரத்தசாட்சியாக மரித்தார்.

- அதிகாரங்கள் 5
- வசனங்கள் 108

# விசுவாச துரோகத்ததை சந்தித்தல்

- யோவான், யூதா நிருபங்கள் எழுதப்பட்டகாலத்தில் விசுவாசதுரோகம் என்பது இன்னும் நிலுவையில் உள்ள காரியமாக இராமல் நடந்துகொண்டிருக்கிற காரியமாக இருந்தது.
- அந்திக்கிறிஸ்துக்களும், கள்ளப் போதகர்களும் உலகில் இருந்தார்கள் (1 யோவா 2:18,4:1, 2யோவா1:7)
- விசுவாச துரோகம் நேரிடும் என்னும் கடுமையான எச்சரிக்கை புதியஏற்பாடு முழுவதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.
  - கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள், பலரது அன்பு தணிந்துபோகும், யாரெல்லாம் முடிவுவரை நிலைநிற்கிறார்களோ அவர்களே இரட்சிக்கப்படுவார் கள் என்று இயேசு எச்சரித்தார் மத் 24:11-13
  - பல சீஷர்கள் இழுப்புண்டு போய்விடுவார்கள் என்று பவுல் எச்சரித்தார் அப் 20:29-30
  - கள்ள உபதேசக்காரர்கள் எழும்புவார்கள் என்றும், அவர்களுடைய அழிவின் வழியை பலர் பின்பற்றிப்போவார்கள் என்றும் பேதுரு எச்சரித்தார் 2பேது2:1-3
- தற்காலத்து விசுவாச துரோக போதகர்கள் அடையாளம்காட்டப்படுகிறார்கள் வச 8-10

வச 8 யூதா இவர்களை குறித்த அடையாளங்களை விபரிக்கிறார்.

1. சொப்பனக்காரர்கள் :

- இவர்கள் கற்பனை உலகத்தில் வாழ்கிறவர்கள். போதையினால் உண்டாகும் மோன நிலையில் இருப்பவர்களாயிருக்க கூடும்

2. மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொள்கிறவர்கள்:

- இயற்கைக்கு மாறான ஒழுக்கக்கேடு உடையவர்கள்

# விசுவாச துரோகத்ததை சந்தித்தல்

3. கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்கள்:

* அதிகாரத்திற்கு கீழ்ப்படிய மறுக்கிறவர்கள்

4. மகத்துவங்களைத் தூஷிக்கிறவர்கள்:

* ஒழுங்குகளையும், அதிகாரத்தில் இருப்பவர்களையும் எதிர்க்கிறவர்கள்.

தற்காலத்து விசுவாச துரோக போதகர்கள் விபரிக்கப்படுகிறார்கள் வச 12-16

வச 12ல்

* கறைகள் : தண்ணீருக்குள் மறைந்திருந்து கப்பலை சேதப்படுத்தும் பாறைகள் - விசுவாசக் கப்பலை சேதப்படுத்துவார்கள் (1 தீமோ 1:18.19)
* தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்: தங்களையே மேய்த்தக் கொள்ளும் மேய்ப்பர்கள். உண்மையான மேய்ப்பர்கள் ஆடுகளை மேய்ப்பார்கள். மில்டன் இந்த சூழ்நிலையை “பசித்த ஆடுகள் மேல்நோக்கிப் பார்க்கின்றன ஆனால் அவற்றிற்கு உணவளிக்கப்படவில்லை” என்று சரியாக விபரித்துள்ளார்.
* தண்ணீரற்ற மேகங்களும கர்த்தருடைய வார்த்தையால் நிறைந்திருக்கிறவர்கள்போல வெளித்தோற்றத்திற்கு காணப்பட்டாலும் உள்ளேயோ வெறுமையானவர்களும், காய்ந்தவர்களும்.
* கனியற்ற மரங்கள் : கனிகளால் அவர்களை அறிவீர்கள் என்று இயேசு சொன்னார் (மத் 7:20)

வச 13ல்

* அமளியான கடலலைகள்: தங்கள் அவமானங்களுக்காக வெட்கப்படாதவர்கள்
* மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள்: சட்டதிட்டமற்றவர்கள், எந்த ஒழுங்கிலும் பயணிக்காதவர்கள்

# விசுவாச துரோகத்தின் காலத்தில் விசுவாசிகள் செய்யவேண்டியதென்ன? வச 20-25

1. பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு

அதாவது கர்த்தருடைய வார்த்தையை கற்றுக்கொள்ளல். கடைசிக்காலத்திற்கான எச்சரிக்கைகளை சொன்னபோது பவுலும், பேதுருவும் இதை வலியுறுத்தினார்கள்.

2 தீமோ 2:15 சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து,

2 தீமோ 3:15 பரிசுத்த வேத எழுத்துக்களை அறிந்து

2 தீமோ 4:2 திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு

2 பேதுரு 1:19 வசனத்தைக் கவனித்திரு

2. பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி

பார்க்க: எபே 6:18, ரோம 8:26-27

வச 21

3. தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு

தேவன் விசுவாசியினிடத்தில் நீடித்த அன்பினாலே அன்புகூருகிறார். ஆனால் விசுவாசி பாவம் செய்வதின் மூலமாக தேவனோடுள்ள ஐக்கியத்தைவிட்டு வெளியேறலாம். சூரியன் பிரகாசிப்பதை நம்மால் தடுக்கமுடியாது. ஆனால் சூரியஒளி நம்மேல் படாதபடி சிறுகுடையினால் தடுக்கமுடியும்.

4. இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்

ஒவ்வொரு விசுவாசியும் எடுத்துக்கொள்ளப்படுவது தேவனுடைய கிருபையினால் மாத்திரமன்றி விசுவாசியின் தகுதியின் அடிப்படையில் அல்ல.

# யூதா நிருபத்தின் முக்கிய பகுதிகள்

**I.** நிருபம் எழுதப்பட்டதற்கான சூழ்நிலை 1-3

A. விசுவாசிகளுக்கான நிச்சயங்கள் வச 1,2

(பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், காக்கப்பட்டவர்கள், அழைக்கப்பட்டவர்கள்)

B. விசுவாச துரோகம் பற்றிய கருத்திற்கு திரும்புதல் வச 3

**II.** விசுவாச துரோக சம்பவங்கள் 4-16

A. விசுவாச துரோகத்தின் ஆரம்பம் வச 4

B. அவிசுவாசத்தினாலே இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள் வச 5

C. எதிர்த்த தூதர்கள் சங்கிலிகளாலே கட்டப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் வச 6

D. சோதோம் கொமோரா பட்டணத்தார் விபசாரப்பாவத்தை செய்து அக்கினியால் அழிக்கப்பட்டார்கள் வச 7

E. தற்காலத்து விசுவாச துரோக போதகர்கள் அடையாளம்காட்டப்படுகிறார்கள் வச 8-10 (அதிகாரங்களுக்கு கீழ்ப்பட மறுக்கிறார்கள்)

F. காயீன்,பிலேயாம்,கோரா விசுவாச துரோகத்திற்கு எடுத்துக்காட்டுகள் வச 11

G. தற்காலத்து விசுவாசதுரோக போதகர்கள் வரையறுக்கப்பட்டு, விபரிக்கப்படுதல் வச 12-16

**III.** விசுவாச துரோகத்தின் காலத்தில் விசுவாசிகளின் பணி வச 17-25

A. விசுவாச துரோகம் நேரிடும் என்று விசுவாசிகள் அப்போஸ்தலர்களால் எச்சரிக்கப்படுதல் வச 17-19

B. விசுவாச துரோகத்தின் காலத்தில் விசுவாசிகள் செய்ய வேண்டியவை வச 20-25